## ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# ரூ.175 கோடியில் 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்'

# 1500 வாகனங்களை நிறுத்தலாம்

சென்னை, செப். 19–
சென்னை மெட்ரோ ரெயில் போக்குவரத்து விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

### ஷெனாய் நகர் ரெயில் நிலையம்

மெட்ரோ ரெயில் பயணி களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் பல் வேறு வசதிகளை மெட்ரோ நிறுவனம் செய்து வருகிறது. சமீபத்தில் முக்கிய மெட்ரோ ரெயில் நிலையங் களில் கால்டாக்சி, ஆட்டோக்கள் அறிமுகம் செய்யப்பட்டது.

இப்போது மெட்ரோ ரெயில் பயணிகள் விரும்பும் பொருட்களை வாங்கிச் செல்வதற்காக முக்கிய மெட்ரோ ரெயில் நிலையங் களில் 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' கட்டும் திட்டத்தை செயல் படுத்துகிறது. முதல் முறை யாக ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கு வசதி யாக அருகில் ஷாப்பிங் காம்ப் ளக்ஸ் அமைக்கப்படுகிறது.

### ரூ.175 கோடி

ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் நிலையம் அமைந்துள்ள திரு.வி.க. பூங்காவுக்கு அடியில் இந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைகிறது. ரூ.175 கோடி செலவில் அமையும் இந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டுமான பணிகளை தனியார் நிறுவனம் ஏற்றுள் ளது.

ஷெனாய் நகர் ரெயில் நிலையத்தில் வந்து இறங்கும் பயணிகளும், வெளியே இருந்து வருபவர்களும் எளிதில் பொருட்களை வாங்கிச் செல்லும் வகையில் இந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதற்கான பணிகள் தற்போது தொடங்கப்பட்டு வருகிறது.

### 1500 வாகனங்கள்

திரு.வி.க. நகர் பூங்காவுக்கு அடியில் அமையும் இந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 4 லட்சம் சதுரஅடி பரப்பள வில் உருவாகிறது. நவீன வசதிகள் கொண்ட இந்த காம்ப்ளக்சில் அனைத்து விதமான பொருட்களையும் விற்பனை செய்ய திட்ட மிட்டுள்ளனர்.

இங்கு வருபவர்கள் வசதிக்காக 600 கார்கள் 900 இருசக்கர வாகனங்கள் என 1,500 வாகனங்களை நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு மாடிக் கட்டிடம் அமைக்கப்படுகிறது. 2 வருடங்களில் இந்த காம்ப் ளக்ஸ் கட்டுமான பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள் ளது.

### பூங்கா புதுப்பிக்கப் படுகிறது

இந்த ஷாப்பிங் காம்ப் ளக்ஸ் அமைக்கும் பணிகள் முடிந்ததும், இதன்மேல் பகுதியில் உள்ள திரு.வி.க. நகர் பூங்கா புதுப்பிக்கப் படுகிறது. '8 வருடங்களுக்கு முன்பு ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் பணிகள் தொடங்கின. இதனால் சேதமடைந்துள்ள பூங்கா மீண்டும் புதுப்பொலிவு பெறும்.

ஷெனாய் நகர் ரெயில் நிலையத்தை தொடர்ந்து ஈக்காட்டு தாங்கல், அரும் பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் "ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்" கட்டும் திட்டம் உள்ளது. இதன்மூலம் மெட்ரோ நிறுவன வருவாய் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.